தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

வியாழக்கிழமை, 1974 மார்ச் 28

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

D.S. Reddy Gold Medals

*233 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of Thiru K. Arivazhagan) : Will the Hon. the Minister for Education be pleased to state whether the presentation of D.S. Reddy Gold Medals for outstanding sportsmen in the regional meets for Secondary Schools in the State, instituted from out of a fund endowed by the respective regions in the name of D.S. Reddy, the then Director of Public Instruction, has been discontinued since the inception of Republic Day Sports?

டி.எஸ். ரெட்டி தங்கப் பதக்கங்கள்

புலவர் ஓ. அறிவுடைநம்பி (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கான வட்டார விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்கு, அந்நாள் கல்வி இயக்குநர் திரு. டி. எஸ். ரெட்டி அவர்களின் பெயரால் அந்தந்த வட்டாரங்களில் ஏற்படுத்தப்பட்ட நிதியைக் கொண்டு டி.எஸ். ரெட்டி தங்கப் பதக்கங்கள் வழங்கும் வழக்கம், குடியரசு நாள் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கப் பட்டதன் காரணமாக நிறுத்தப்பட்டு விட்டது என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : "டி. எஸ். ரெட்டி தங்கப் பதக்கக் கல்விக் கட்டளை நிதி" அரசினர் கட்டளைப் பொருளாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள கட்டளைகள் பட்டியலில் இடம் பெறவில்லை.